**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**M.C.OP.No.54/2020- PW-2**

| | |
|---|---|
| Name | திரு.வேணு |
| Father Name | திரு.சுப்பிரமணி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **07.08.2026.**

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

என் சொந்த ஊர் இராணிபேட்டை மாவட்டத்திலுள்ள பூண்டி கிராமம் ஆகும். மனுதாரர் லோகநாதனை எனக்கு நன்கு தெரியும். அவரை எனக்கு 25 வருட காலமாக தெரியும். அவர் பாகவெளி கிராமத்தை சேர்ந்தவர். விபத்து நடந்த போது சத்தம் கேட்டு நான் திரும்பி பார்த்த போது லோகநாதன் கீழே விழுந்தாரா என்றால் ஆமாம். அந்த சமயத்தில் டாடா இண்டிகா கார் போனதை நான் பார்க்கவில்லை. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது போல் மனுதாரர் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழவில்லை என்றாலும், அவர் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே இறங்கி சாலையில் நின்றுகொண்டிருந்த போது டாடா இண்டிகா கார் வேகமாக வந்து மனுதாரரின் காலில் உரசிவிட்டு சென்றுவிட்டது என்றால் தவறு. விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்கில் போலிசார் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை. நான் சொன்ன விவரங்களின் அடிப்படையில் மனுதாரரின் வழக்கறிஞர் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை தயார் செய்தார். டாடா இண்டிகா காரால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும், நான் அதைப் பார்க்காமல் மனுதாரர் என் நண்பர் என்பதற்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது போல் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:– இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.